# பாடம் 48: செபமாலை

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1 முதல் 12 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 12 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 14 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், கத்தோலிக்கத் திருச்சபை முழுவதன் எல்லா அருள்பணியாளர்களும் துறவறத்தாரும் ஒவ்வொரு நாளும் செபிக்க வேண்டிய, திருச்சபையின் அலுவல்சார் செபமான முறைநேர வழிபாடு பற்றி நாம் கற்றோம். நாம் இன்னும் செபம் குறித்தத் தலைப்பிலேயே இருக்கிறோம், மேலும் இந்த பாடத்தில், செபமாலை பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. பல நூற்றாண்டுகளாக, பழைய ஏற்பாட்டில் உள்ள தாவீதின் 150 திருப்பாடல்கள் (அல்லது “திருப்பாக்கள்”) தொடக்கத் திருச்சபையின், சிறப்பாக துறவுமடக் குழுமங்களின் நடுவே செப சுழற்சிக்கு மையமாக இருந்தன. திருப்பாடல்களின் கையெழுத்துப் பிரதிகள் பெரிதும் இந்த குழுமங்களுக்கு உரியவையாக இருந்ததால், உண்மையில், சிலரே வாசிக்க இயன்றவர்களாக இருந்ததால், திருப்பாடல்களை ஒப்புவித்தல் போன்ற எளிய வடிவிலான செபம் உருவானது. ஆண்டவரின் செபம் 150 தடவைகள் திரும்பத்திரும்பக் கூறப்பட்டது, சில நேரங்களில் கூழாங் கற்கள் அல்லது முடிச்சுள்ள நாண்கள் சரியான எண்ணிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்டன, “கொரோனா” அல்லது மகுடம் என்று அறியப்பட்ட மணிகளின் வளையம் பரவலானதாக மாறியது.

2. 12ஆம் நூற்றாண்டில், மரியா பக்தியின் பரவலான வளர்ச்சியால், மணிகளோடு இணைந்த செபத்தில், ஆண்டவரின் செபத்துக்கு (விண்ணுலகில் இருக்கிற) மாற்றாக மங்கல வாழ்த்து செபம் (அருள் நிறைந்த மரியே) இடம் பிடித்தது. திரும்பத்திரும்ப மங்கல வாழ்த்து செபத்தை செபிப்பது “பேறுநிறை கன்னி மரியாவின் திருப்பா” என்று அறியப்பட்டது.

3. 150 மங்கல வாழ்த்து செபங்களும், தோமினிக்கு துறவியான ஹென்றி கால்கர் (1328-1408) என்பவரால் 15 பத்துகளாகப் பிரிக்கப்பட்டன, ஒவ்வொரு பத்தும் இயேசு மற்றும் மரியாவின் வாழ்வின் நிகழ்வைச் சுட்டுவதாக அமைந்தன. தோமினிக்கரான ஆலனுஸ் தெ ரூப்பே (1428-1478) அந்த மீட்பின் வரலாற்றை மகிழ்ச்சி, துயரம் மற்றும் மாட்சியின் மறையுண்மைகளாகப் பிரித்து அமைத்தார். இந்த செபமாலை புனித தோமினிக்கிடம் இருந்து வந்ததாக அவர் கூறியதால், செபமாலையின் திருத்தூதுவம் தோமினிக்க நிரையின் சிறப்பு அக்கறையாக அமைந்தது.

4. திருத்தந்தை 13ம் லியோ, *ஒக்தோப்ரி மென்சே* (அக்டோபர் மாதத்தில்) என்ற தமது சுற்றுமடலில், இந்த செபமாலை, புனித தோமினிக்கிற்கு நமது அன்னை வழங்கிய “அவரது கட்டளை மற்றும் ஆலோசனையில்” அதன் தொடக்கத்தைக் கொண்டுள்ளது என்று கூறுகிறார். திருத்தந்தை 13ம் லியோ இவ்வாறு கற்பிக்கிறார்: “குறிப்பாக கத்தோலிக்கத்துக்கு ஆபத்தான நேரங்களில், அவரது கட்டளை மற்றும் ஆலோசனையால், நிறுவப்பட்டு ஒளிமிகு புனித தோமினிக்கால் பரப்பப்பட்டது என்ற உண்மையால், இந்த பக்திக்கு விண்ணக அரசி தாமே பெரும் பயனை வழங்கினார் என்பது காட்டப்பட்டுள்ளது.” இந்த மரபு பல ஓவியங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

5. தோமினிக்கத் திருத்தந்தை, புனித 5ம் பயஸ், செபமாலையைப் பரப்பக் கூடுதலாகப் பலவற்றைச் செய்தார், அதனால் திருச்சபையின் புகழ்மிக்க பக்தியில் ஒன்றாக அது மாறியது. அதே திருத்தந்தை புனித 5ம் பயஸ், 1569ல் *கொன்சுவெருந்த் ரொமானி பொந்திபைசிஸ்* (ரோமை திருத்தந்தையர் பயன்படுத்துகிற) என்ற திருத்தந்தையின் ஆணையோலை வழியாக தற்போதுள்ள வடிவிலான செபமாலைக்கு அதிகாரப்பூர்வ அங்கீகாரம் அளித்தார். மங்கல வாழ்த்து செபத்தின் இரண்டாம் பகுதியையும், ஒவ்வொரு மறையுண்மையின் முடிவிலும் மூவொரு கடவுள் புகழையும் இணைத்து செபமாலை முழுமைப்படுத்தப் பெற்றிருந்தது.

6. மங்கல வாழ்த்து செபம் புனித லூக்காவின் நற்செய்தியில் இருந்து இரண்டு பத்திகளைக் கொண்டுள்ளது: வானதூதர் கபிரியேலின் முன்னறிவிப்பு வாழ்த்து, ‘‘அருள் நிறைந்தவரே வாழ்க, ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்’’, மற்றும் எலிசபெத்தின் சந்திப்பு வாழ்த்து, ‘‘பெண்களுக்குள் நீர் ஆசிபெற்றவர், உம் கருப்பையின் கனியும் ஆசிபெற்றதே’’. 13ஆம் நூற்றாண்டின் நடுவில் மேற்கு ஐரோப்பாவில், இந்தச் சொற்களை மட்டுமே கொண்டிருந்த இந்த செபத்தில், ‘‘வாழ்க’’ எனும் சொல்லுக்கு முன்பாக ‘‘மரியா’’ என்றப் பெயர் மட்டும் கூடுதலாகச் சேர்ந்திருந்தது என்பதை, இந்த செபம் குறித்த புனித தாமஸ் அக்குவினாஸின் விளக்கவுரையால் அறிகிறோம். ‘‘புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்’’ என்ற விண்ணப்பம் 15ஆம் நூற்றாண்டில் தோன்றி, 1566ல் திரெந்து சங்கத்தின் மறைக்கல்வியில் சேர்க்கப்பட்டது.

7. 2002 அக்டோபரில், திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் தியானத்திற்கான கூடுதல் மறையுண்மைகளின் தொகுப்பாக ஒளியின் மறையுண்மைகளைச் செபமாலையில் சேர்த்தார். இது மால்டாவின் முதல் புனிதரான, புனித ஜார்ஜ் ப்ரெக்காவால் 1957ல் முன்மொழியப்பட்டது, அவர் திருத்தந்தை 16ம் பெனடிக்டால் 2007ல் புனிதராக அறிவிக்கப்பட்டார் (திருமுறையேற்பு செய்யப்பட்டார்).

8. செபமாலையின் **மகிழ்ச்சிநிறை மறையுண்மைகள்** (திங்கள் மற்றும் சனி)
அ) மரியாவுக்கு ஆண்டவரின் முன்னறிவிப்பு
*மரியாவின் இயேசுவின் தாயாகத் தேர்வு செய்யப்படுகிறார்.* லூக்கா 1:26-38 வாசிக்கவும்.
ஆ) எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு
*மரியா நம் ஆண்டவரின் தாய் என எலிசபெத் கண்டுணர்கிறார்.* லூக்கா 1:39-56 வாசிக்கவும்.
இ) ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு
*இயேசு பிறக்கிறார், தீவனத்தொட்டியில் கிடத்தப்படுகிறார்.* லூக்கா 2:1-21 வாசிக்கவும்.
ஈ) ஆண்டவரைக் காணிக்கையாக்கல்
*இயேசு எருசலேம் கோயிலில் காணிக்கையாக அளிக்கப்படுகிறார்.* லூக்கா 2:22-40 வாசிக்கவும்.
உ) பன்னிரு வயதில் இயேசுவைக் கோயிலில் கண்டடைதல்
*இயேசு கடவுளின் சட்டங்களை விவாதிக்கிறவராகக் காணப்படுகிறார்.* லூக்கா 2:41-52 வாசிக்கவும்.

9. செபமாலையின் **துயர்நிறை மறையுண்மைகள்** (செவ்வாய் மற்றும் வெள்ளி)
அ) தோட்டத்தில் இயேசு துயருறுதல்
*இயேசு உலகின் பாவங்களை முன்னிறுத்திச் செபிக்கிறார்.* லூக்கா 22:39-46 வாசிக்கவும்.
ஆ) கற்றூணில் கட்டி அடித்தல்
*இயேசு தம் இறப்புக்கு முன் சாட்டையால் அடிக்கப்படுகிறார்.* லூக்கா 23:14-22 வாசிக்கவும்.
இ) இயேசுவுக்கு முள்முடி சூட்டப்படுகிறது
*இயேசு வேதனை அளிக்கும் முள்முடியால் இழிவுபடுத்தப் பெறுகிறார்.* மாற்கு 15:16-20 வாசிக்கவும்.
ஈ) இயேசு சிலுவையைச் சுமக்கிறார்
*இயேசு நமது பாவங்களின் சுமையைத் தமது சிலுவையில் சுமக்கிறார்.* லூக்கா 23:26-31 வாசிக்கவும்.
உ) நம் ஆண்டவர் சிலுவையில் அறையப்படுகிறார்
*இயேசு கிறிஸ்து எல்லா மனிதரின் மீட்புக்காக இறக்கிறார்.* லூக்கா 23:33-46 வாசிக்கவும்.

10. செபமாலையின் **மாட்சிநிறை மறையுண்மைகள்** (புதன் மற்றும் ஞாயிறு)
அ) இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
*இயேசு இறப்பை வென்றவராக உயிர்த்தெழுகிறார்.* லூக்கா 24:1-49 வாசிக்கவும்.
ஆ) இயேசுவின் விண்ணேற்றம்
*இயேசு விண்ணேறுகிறார், அவர் நமக்கு ஒரு சிறப்பு அலுவலையும் தருகிறார்.* லூக்கா 24:49-53 மற்றும் திருத்தூதர் பணிகள் 1:6-11 வாசிக்கவும்.
இ) தூய ஆவியாரின் வருகை
*பெந்தக்கோஸ்து நாளில் திருச்சபை பிறக்கிறது.* திருத்தூதர் பணிகள் 2:1-41 வாசிக்கவும்.
ஈ) மரியாவின் விண்ணேற்பு
*கன்னி மரியா மாட்சியுடன் விண்ணகத்தில் ஏற்கப்படுகிறார்.* திருவெளிப்பாடு 12:1-11 வாசிக்கவும்.

உ) மரியா விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டப் பெறுகிறார்
*மரியா எல்லா படைப்புயிரிகளுக்கும் மேலாக உயர்த்தப்படுகிறார்.* திருவெளிப்பாடு 12:1-11 வாசிக்கவும்.

11. செபமாலையின் **ஒளியின் மறையுண்மைகள்** (வியாழன்)
அ) யோர்தானில் திருமுழுக்கு
*கடவுள் தமது மகன் இயேசுவைப் பறைசாற்றுகிறார்.* மத்தேயு 3:12-27 வாசிக்கவும்.
ஆ) கானாவூர் திருமணம்
*இயேசு ஒரு திருமணத்தில் வியப்பூட்டும் அற்புதம் செய்கிறார்.* யோவான் 2:1-12 வாசிக்கவும்.
இ) இறையரசைப் பறைசாற்றுதல்
*இயேசு முக்கியமான ஒன்றைச் செய்ய நம்மை அழைக்கிறார்.* மத்தேயு 5:1-12 வாசிக்கவும்.
ஈ) உருமாற்றம்
*இயேசு மாட்சியுடன் உருமாறுகிறார்.* மத்தேயு 17:1-9 வாசிக்கவும்.
உ) நற்கருணையை நிறுவுதல்
*இயேசு தமது உடலையும் குருதியையும் நமது மீட்புக்காகப் பகிர்கிறார்.* லூக்கா 22:14-20 வாசிக்கவும்.

12. மாணவர்களோடு சேர்ந்து ஒவ்வொரு நாளின் அடிப்படையில் செபமாலை செபிக்கவும். பயனுள்ள ஒரு காண்மத்தைப் (வீடியோ) பயன்படுத்தலாம்.

13. கிறிஸ்து நமக்கு மாதிரியாகத் திகழுமாறு மண்ணகம் வந்தார். மீட்பின் நற்செய்தியை நமக்கு கொணரவும், நமது மீட்பை நிறைவேற்றவும் மட்டுமின்றி, நம் ஆன்மிக வாழ்வுக்கு நேர்த்தியானப் படியுருவாக இருக்கவும் வாக்கு மனிதரானார்.

கிறிஸ்துவின் மறைபொருள்கள் ஒவ்வொன்றும் அவரது புண்ணியங்களின் வெளிப்பாடாக இருக்கிறது. குடிலுக்குரியத் தாழ்ச்சி, அவரது மறைந்த வாழ்வின் ஓய்வுநிலை, அவரது பொது வாழ்வின் பேரார்வம், அவரது பலியின் தன்னழிப்பு, அவரது வெற்றியின் மாட்சி: இவை அனைத்தும் நாம் பின்பற்ற வேண்டிய புண்ணியங்களைக் கொண்டுள்ளன; அவை நாம் பங்குபெற வேண்டிய மறையுண்மைகள்.

இதன் காரணமாக, கிறிஸ்துவின் மறையுண்மைகளை – செபமாலை செபிக்கின்ற நேரத்தில் -- தியானித்தல் ஆன்மாவுக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கிறது. இயேசுவின் வாழ்வு, இறப்பு, மற்றும் மாட்சி ஆகியவை நமது வாழ்வு, இறப்பு மற்றும் மாட்சிக்கு நிறை மாதிரிகளாகத் திகழ்கின்றன.

14. ஒருபோதும் இந்த உண்மையை மறக்காதீர்: நித்தியத் தந்தை, அவரது மகனை நாம் எவ்வளவு பின்பற்றுகிறோம், தமது மகனின் சாயலை அவர் நம்மில் எவ்வளவு காண்கிறார் என்பதில்தான் நமக்காக மகிழ்வார், ஏனெனில் அவரது உருவிலேயே அவர் நித்தியம் அனைத்தில் இருந்தும் நம்மை முன்குறித்து வைத்துள்ளார். கிறிஸ்து நமக்கு காட்டியதைத் தவிர வேறு வடிவிலான புனிதத்துவம் எதுவும் நமக்கில்லை. நமது நேர்த்தியின் படிநிலை, இயேசுவை நாம் பின்பற்றுகிறப் படிநிலையாலும், அவருடனான நமது ஒன்றிப்பினாலும் அளவிடப்படுகிறது.